# அறுவடைத் திருவிழாக்கள்

## பொங்கல்



தமிழகத்தில் கொண்டாடப்படும் அறுவடைத்திருநாள் பொங்கல் பண்டிகை ஆகும். இது தைமாதம் முதல் நாளன்று கொண்டாடப்படுகிறது. நம் வளமான வாழ்விற்கு அடிப்படையாக விளங்கும் மழைக்கும், சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கும் திருநாள் பொங்கல் ஆகும்.



## போகி



பொங்கலின் முந்தைய நாள் அதாவது மார்கழி மாதத்தின் கடைசி நாளே போகிப்பண்டிகை ஆகும். இந்நாளில் பழைய பொருள்களை அகற்றி, இல்லங்களில் வெள்ளைஅடித்து, வண்ணம் தீட்டுவர்.

## பெரும் பொங்கல்


ஆண்டுதோறும் தைத்திங்கள் முதல் நாளன்று கொண்டாடப்படும் இத்திருநாளில் புதுப்பானையில் பாலைப் பொங்கவிட்டு அதில் புத்தரிசி இட்டுப் பொங்குவர். அப்பொழுது அனைவரும் எழுச்சி பொங்க 'பொங்கலோ பொங்கல்!' என முழங்கி மகிழ்வர். அவ்வாறு பொங்கிய பொங்கலைச் சூரியனுக்குப் படைத்து வழிபட்டு உண்டு மகிழ்வர்.



## மாட்டுப்பொங்கல்



உழவனுக்கு உதவியாக உடனிருந்து உழைத்த கால்நடைகளைப் போற்றி மகிழ்ந்திடவும், நன்றி கூறி வழிபடவும் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் மாடுகளைக் குளிப்பாட்டி அலங்கரிப்பர். பொங்கல் வைத்து மாடுகளுக்கு ஊட்டி மகிழ்வர்.



மாலையில் மஞ்சு விரட்டு நடைபெறும். மாடுகள் பூட்டிய வண்டியில் அமர்ந்து ஊரை வலம் வந்து மகிழ்வர். 'பொங்கலோ பொங்கல்! மாட்டுப் பொங்கல்!' என அனைவரும் மகிழ்ச்சி பொங்க ஆர்ப்பரிப்பர். தைமாதம் இரண்டாம் நாளான இந்நாள் திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

## காணும் பொங்கல்

மாட்டுப் பொங்கலுக்கு மறுநாளான காணும் பொங்கல் அன்று இளையவர்கள் பெரியவர்களைச் சந்தித்து வாழ்த்துகளைப் பெறுவர். பெரியோர் பரிசுகளை வழங்கி ஆசி கூறுவர். காலை முதல் மாலை வரை ஆற்றங்கரை, கடற்கரை மற்றும் பொழுதுபோக்கு இடங்களுக்குச் சென்று இனிதே பொழுதுபோக்கி மகிழ்வர். இந்நாளை உழவர் திருநாளாகக் கொண்டாடுகிறோம்.

> பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழகத்தில் **ஜல்லிக்கட்டு** என்ற வீர விளையாட்டு நடைபெறும். அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டு உலகப்புகழ் பெற்றது.

## திருவோணம்

கேரளாவில் ஆவணி மாதம் வளர்பிறை நாளில் திருவோண நட்சத்திரத்தில் திருவோணம் பண்டிகை உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. இத்திருநாளில் மக்கள் தங்கள் வீடுகளில் பல வண்ணப் பூக்கோலங்களை வரைந்து அழகுபடுத்துவர். அதன் நடுவில் பெண்கள் குத்துவிளக்கேற்றி வைத்துச் சுற்றிலும் மகிழ்ச்சியுடன் பாட்டுப்பாடி நடனமாடுவர்.





ஓணம் பண்டிகை அறுவடைத் திருநாளாகவும் கொண்டாடப்படுகிறது. இத்திருவிழாக் காலத்தில் இராமாயண, மகாபாரதக் கதைகளைக் கதகளி நடனம் மூலம் நாட்டியமாடி விளக்குவார்கள்.

## படகுப்போட்டி



திருவோணத்தை முன்னிட்டு கேரளாவில் ஆலப்புழா மற்றும் கோட்டயம் நகரங்களில் படகுப்போட்டிகள் நடைபெறும்.

## ஹோலிப்பண்டிகை

ஆண்டுதோறும் கோதுமை அறுவடைக் காலத்தில் பங்குனி மாதம் பௌர்ணமி நாளில் இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. ஹோலிப் பண்டிகை இந்தியாவின் வட மாநிலங்களில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.





இக்கொண்டாட்டத்தின் போது மக்கள் வண்ணப் பொடிகளைத் தூவியும், பூசியும், வண்ணங்கள் கலந்த நீரை ஒருவர் மீது ஒருவர் ஊற்றியும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர்.

## ரக்ஷா பந்தன்





சகோதரத்துவ உணர்வை மேம்படுத்தும் விதமாக ஆண்டுதோறும் ரக்ஷாபந்தன் திருவிழா கொண்டாடப்படுகிறது. தங்களைப் பாதுகாக்கும் சகோதரர்களுக்கு நன்றி தெரிவிக்கவும், தங்கள் அன்பினை வெளிப்படுத்தவும் பெண்கள் தங்கள் சகோதரர்களின் கையில் அழகு செய்யப்பட்ட வண்ண நூலைக் (ராக்கி) கட்டுவர்.

## ஆடிப்பெருக்கு

ஆடிப்பெருக்கு ஆண்டுதோறும் ஆடி மாதம் 18ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. காவிரி மற்றும் ஆற்றங்கரையோரப் பகுதிகளில் உள்ள மக்களால் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மழை நீரைப் போற்றி வழிபடும் விழாவே ஆடிப்பெருக்காகும்.



ஆற்றில் நீர்ப் பெருக்கெடுத்து ஓடுவதையே **ஆடிப்பெருக்கு** எனச் சிறப்பித்துக் கூறுகின்றனர். பயிர் விளைச்சலுக்கும், வாழ்விற்கும் அடிப்படையான நீர் வளத்தை மக்கள் வணங்குகிறார்கள்.

## தேர்த்திருவிழா

தமிழகத்தில் உள்ள கோயில்களில் தேர்த்திருவிழா என்பது ஒரு முக்கியமான நிகழ்வாகும். மலர் மற்றும் மின் விளக்குகளால் அழகு செய்யப்பட்ட தேரில் உற்சவர் வீதி உலா வருவார். இத்திருத்தேரை மேள தாளங்கள் முழங்க மக்கள் வடம் பிடித்து இழுத்துச்செல்வர். கரகாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம் போன்றவை தேரின் முன்னே அணிவகுத்துச் செல்லும். அந்நாளில் கோயிலின் இரு பக்கமும் உணவுப் பண்டங்கள், அழகுப் பொருள்கள் போன்ற பல்வேறு தற்காலிகக் கடைகள் அமைக்கப்பட்டிருக்கும். இவ்விழாவில் உற்றார் உறவினர் அனைவரும் மகிழ்ச்சியுடன் பங்கேற்பர்.



### பிற விழாக்கள்



- இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு பிறந்த நவம்பர் 14 ஆம் நாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.



- நம் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்.இராதாகிருஷ்ணன் பிறந்த செப்டம்பர் 5ஆம் நாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.



- அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த கேலார்ட் நெல்சன் என்பவர் முதன் முதலில் புவியையும் அதிலுள்ள தாவரங்களையும் மற்றும் உயிரினங்களையும் பாதுகாக்க வேண்டி கி.பி 1970 இல் ஏப்ரல் 22 ஆம் நாள் புவி தினத்தைக் கொண்டாடினார். இதனைத் தொடர்ந்து நாம் ஒவ்வொரு வருடமும் அதே நாளைப் புவி தினமாகக் கொண்டாடுகிறோம்.



## செயல்பாடுகள்

1. இவ்வருட மாத நாள்காட்டியை எடுத்துக்கொள். குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு மாதத்திலும் கொண்டாடப்படும் விழாக்களின் பெயர்ப் பட்டியலைத் தயார் செய்க.

2. உனது ஊர்த் திருவிழா குறித்து எழுது.


நீ பார்த்த கடைகள்: ______________________.

வாங்கிய பொருள்கள்: ______________________.

உண்ட தின்பண்டங்கள்: ______________________.

மகிழ்ந்து விளையாடிய விளையாட்டுகள் : ______________________.

உன் வீட்டிற்கு வந்திருந்த விருந்தினர்கள் உறவினர்கள் } : ______________________.



**3. கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு வாழ்த்து அட்டை தயார் செய்து, உன் நண்பனுக்கு அனுப்பு.**


## மதிப்பீடு

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. மாட்டுப்பொங்கலன்று நடைபெறும் வீர விளையாட்டு ______________.
2. சகோதர சகோதரிகளின் அன்பை வெளிப்படுத்தும் தினம் ______________.
3. பொங்கல் திருநாள் __________ம், __________ம் நன்றி தெரிவிப்பதற்காகக் கொண்டாடப்படுகிறது.
4. கிறிஸ்துமஸ் __________ மற்றும் __________ வலியுறுத்தும் விதமாகக் கொண்டாடப்படுகிறது
5. புவி தினத்தை முதன் முதலில் ____________ என்பவர் கொண்டாடினார்.


### II. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. திருவோணம் | – | ஈகைத்திருநாள் |
| 2. ரமலான் | – | புத்தர் பிறந்த நாள் |
| 3. புத்த பௌர்ணமி | – | ஏப்ரல் 22 |
| 4. சுதந்தர தினம் | – | படகுப்போட்டி |
| 5. புவி தினம் | – | ஆகஸ்ட் 15 |




**III. சுருக்கமான விடையளி:**

1. தேசிய விழாக்கள் சிலவற்றைக் கூறுக.
2. ரமலான் கொண்டாடப்படுவதின் நோக்கம் யாது ?
3. உன் பள்ளியில் பொங்கல் கொண்டாடுவதற்கு என்னென்ன பொருள்கள் சேகரிப்பாய் ?
4. படகுப் போட்டி நடைபெறும் இடங்களைக் கூறுக.
5. ஆடிப் பெருக்கு சிறு குறிப்பு வரைக.



**IV. கொம்புக்கு வண்ணம் தீட்டி,மாட்டை அலங்காரம் செய்து மாட்டுப்பொங்கலுக்குத் தயார் செய்.**



**V சர்க்கரைப் பொங்கல் செய்வோமா ?**

தேவையான பொருள்களைப் பானையில் எடுத்து எழுதுக.

**அரிசி,** **மிளகாய்த்தூள்,** **சர்க்கரை,**

**கொத்தமல்லி,** **நெய்,** **முந்திரி,**

**ஏலக்காய்,** **வெல்லம்.**

